பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸூ சித்திரை மீ 16 உ. திங்கட்கிழமை [29 04 1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 146

# ஆனையிறவு மோதலில் 25 படையினர் மரணம்!

## 17 வேங்கைகள் உயிர்த் தியாகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

நேற்றும் நேற்று முன்தினமும் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற உக்கிரச் சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அதிகாரி ஒருவர் உட்பட இருபத்தியைந்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்.

இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 17 பேர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தனர்.

நேற்று முன்தினம் காலையில் பரந்தன், ஆனையிறவுச் சந்தை, தட்டுவன்கொட்டி ஆகிய மூன்று பகுதிகளையும் நோக்கி இராணுவத்தினர் முன்னேறியபோதே விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் 25 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர் 40 இற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் அனைவரும் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த ஆறு இப்பாய்களின் சடலங்களை உருக்குலைந்த நிலையில் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

சனியன்று இடம்பெற்ற மோதலின்போது படையினருக்கு உதவியாக மூன்று பொம்மர்கள், மூன்று ஹெலிக்கொப்டர்கள், அவ்ரோ விமானம் ஒன்று ஆகியன மாறி மாறித் தாக்குதல் நடத்தின.]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் ஆனையிறவு முகாம் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ஏ. கே. எல். எம்- ஜி 1
- ★ அதற்குரிய றம்மகஸின்-1
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி-1
- ★ ரி-56 ரகத் துப்பாக்கி-1
- ★ 203 ரகப் பிஸ்டல்-1
- ★ ஜே. ஆர். கிரனேட்-4
- ★ ஐ. எம். ரவைகள்-1,450
- ★ ஏ. கே. எல். எம். ஜி லிங்க்-125
- ★ 60 எம். எம். மோட்டார் ஸ்ரான்ட்-1

[உ]

## இளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 29

கடந்த வெள்ளியன்று மாலை 3-45 மணியளவில் திருகோணமலை மாவட்டத்தில் 10 ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து கிக்கம் விகாரை இராணுவ முகாமுக்குச் சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர்.

ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

## இன்னுயிர் நீத்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப் 29

ஆனையிறவுப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சண்டையில் நேற்று முன்தினம் 15 போராளிகளும் நேற்று இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வீரமரணமடைந்த 15 போராளிகளில் 14 பேரின் விபரங்கள் கிடைக்கப்பெற்றன. அவை வருமாறு:- போல் [மு. உதயகுமார்—பளை], திலகன் [ஆ. பாமாராஜா — முறிகண்டி], பீற்றர் [கு. மோகன்ராஜ்—துணுக்காய்], இங்லிலி [செ. பாஸ்கரன் — இரணைமடு], புவி [இவவோகநாதன்—துணுக்காய்], கருணா [ஆ. சந்திரகுமார் — பரந்தன்], தியாகு [செ. அரிச்சந்திரன்—ஸ்கந்தபுரம்], றோஸான் [சேகர் — கிளிநொச்சி], எல்பேட் [கனகசுந்தரம்—உருத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நள்ளிரவுவேளை குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 29

தீவுப் பகுதி பக்கமாக நேற்று நள்ளிரவு வேளையில் குண்டுச் சத்தங்கள் கேட்டன.

## நேற்றும் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், ஏப் 29

நேற்றுக் காலை முதல் மாலை வரை ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகள் முழுவதிலும் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மூன்று பொம்மர்கள், மூன்று ஹெலிகள், அவ்ரோ விமானம் ஒன்று என்பன தாக்குதல் நடத்திய வண்ணம் இருந்தன.

இதேவேளை இராணுவமுகாமிலிருந்து ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவந்தது.

நேற்று முன்தினமும் காலை 5. 30 மணி முதல் மாலை 5 மணிவரையும் ஆனையிறவுப் பகுதியில் உக்கிரச் சண்டை நடைபெற்றது. [உ]

## பூநகரியில்நேற்று ஹெலி சூடு

பூநகரிப் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஹெலிதாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி நிலையம், ஒரு வீடு, ஒரு மினிவான் என்பன சிறு சேதங்களுக்கு இலக்காகின.]

## முச்சந்தி முரளி



தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று [illegible]

## போக்குவரத்து தடை

வடக்கே இருந்து சென்றவர்கள் தாண்டிக்குளத்திற்கு அப்பால் நேற்று போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் வடக்கேயிருந்து சென்ற கொழும்புப் பயணிகள் நொச்சிமோட்டை, ஓமந்தைப் பகுதிகளில் தங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் வவுனியாவில் இருந்து பயணிகள் வடக்கே வந்தனர். [ஒ-5]

## கடற்படை வாகன அணி மீது திருமலையில் தாக்குதல்

### 'டிரக்' ஒன்றும் சேதமானது

யாழ்ப்பாணம், ஏப் 29

திருகோணமலையிலிருந்து கடவானை முகாமுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய கடற்படையினர் மீது நேற்று மாலை 3. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

34 வாகனங்கள் சகிதம் வந்த கடற்படையினர் மீது ஆர் பி ஜி மற்றும் 60 எம்.எம் மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டன; துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

புலிகளின் தாக்குதலில் ஒரு ட்ரக் சேதம் அடைந்தது சேதங்கள் குறித்து மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை [உ]

### ஸ்ரீலங்கா கடற்படையினர்

## தமிழக மீனவர் மீது சூடு; இந்திய அரசு கவலை

கொழும்பு, ஏப். 29

பாக்குநீரிணையில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய சம்பவங்கள் தொடர்பாக இந்தியா இலங்கையிடம் கவலை தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா, வெளியுறவு துணை அமைச்சர் ஜோன் அமரதுங்காவைச் சந்தித்து, அவரிடம் இந்தியாவின் கவலையை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு துணை அமைச்சர் அமரதுங்கா உத்தரவிட்டுள்ளார். [ஒ-எ]

### தாண்டிக்குளம் சம்பவம்:

## ஐ. நா. தூதரகப் பிரதிநிதி மயிரிழையில் தப்பினார்!

யாழ்ப்பாணம், ஏப். 29

நேற்று முன்தினம் நண்பகல் தாண்டிக்குளம் இராணுவ முகாம் பகுதியில் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் வாகன அணி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவத்தில் அந்த அமைப்பின் இலங்கைக்கான உதவிப்பிரதிநிதி மயிரிழையில் உயிர் தப்பினார்.

மடு அகதிமுகாமுக்கு என எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களை இறக்கி விட்டு, கொழும்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த வாகன அணியே தாக்குதலுக்கு இலக்கானது.

தாண்டிக்குளம் காவலரண் பகுதியில் சோதனைக்காக வாகன அணியில் வந்த 15 லொறிகளும் நிறுத்தப்பட்டிருந்த சமயமே அவை தாக்குதலுக்கு இலக்காகின.

வாகன அணிக்கு முன்னணியில் ஐ. நா. தூதரகத்தின் வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யூ. டி. கிளாரன்ஸ் "பிக்கப்" வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அதன் அருகே ஷெல் விழுந்து வெடித்தது.

அதனால் அவரது வாகனம் சேதமுற்றது. லொறி ஒன்று முற்றாக எரிந்து நாசமானது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் சூட்டுக்கு நாரந்தனைவாசி மரணம்

புளியங்கூடல், ஏப், 29

புளியங் கூடலை அண்டிய சின்னமடுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

நாரந்தனை, சூரியவத்தைப் பகுதியைச்சேர்ந்த பரினாந்து அருளப்பு [75 வயது] கழுத்தில் குண்டுபட்டு அந்த இடத்திலேயே மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புளியங்கூடலில் திக்குத்திக்காக உள்ள படையினர் ஷெல் தாக்குதலை நடத்தி வருவதாகவும் கூறப்பட்டது. [ஒ-125]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனிவேர்சல்

## பழைய மாணவர் கலந்துரையாடல்

எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவ, மாணவிகள் அனைவரும் 29-4-91 [திங்கள்] பிற்பகல் 4 - 30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்;

நிர்வாக இயக்குநர்,
யூனிவேர்சல்
சுந்தரமடம்,
யாழ்ப்பாணம்.

[சி/5142]


# அகதிகள் நேற்றும் வருகை

யாழ்ப்பாணம், ஏப் 29

தீவுப் பகுதியில் இருந்து நேற்றும் ஏராளமான மக்கள் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இதேசமயம்—

நேற்று அருநகர் பகுதியில் வீடு வீடாகச் சேகரிக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் தீவக அகதிகளுக்கு வழங்கப் பட்டன. [ஒ-3-51]

# ஐ. தே. க. அரசினால் தீர்வு காண முடியாது!

## தேர்தல் கூட்டத்தில் சிறிமா

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்போதுள்ள ஐ.தே.க அரசாங்கத்தினால் ஒருபோதும் முடியாது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எம்பிலிபிட்டியாவில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி அரசு நடைமுறைப்படுத்திய விவசாயக் கொள்கை காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அமைதியாக வாழ்ந்தார்கள் என்றும் திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். [ஒ-எ]


உ
சிவமயம்

### யாழ்ப்பாணம், திருவண்ணைநகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீஸ்வர சுவாமி திருக்கோவில் (வண்ணை சிவன் கோவில்)

ஆலய பரிபாலன சபை

மேற்படி திருக்கோவிலுக்குரிய ஆதனங்களைப் பொறுப்பேற்றவர்கள், உபயோகிப்பவர்களுக்கான

## கூட்டம்

மேற்படி திருக்கோயிலுக்குரிய காணி, வீடு, கடை, வயல், தோட்டம் முதலிய ஆதனங்களை வாடகைக்கோ, குத்தகைக்கோ, கீழ்க்குத்தகைக்கோ அல்லது வேறு எவ்வகையிலோ பெற்றுள்ளவர்கள் அவ்வாறான ஆதனங்களை உபயோகிப்போர், அனுபவிப்போர்கள் எல்லோரையும் நிகழும் பிரசோற்பத்தி ஹூ சித்திரை மாதம் 22 ஆம் நாள் [5 - 5 - 1991] ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தயவுசெய்து கலந்து கொள்ளுமாறு மேற்படி கோவிலை பராமரிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கும் பரிபாலன சபையினர் அழைக்கின்றனர்.

சைவப்புலவர்
வ கந்தசாமி,
தலைவர்.

சி. நடேஸ்வரன்,
செயலாளர்.

வண்ணார்பண்ணை,
23 - 04 - 1991

[சி 4952]


# பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வல்வை மகளிர் கல்லூரியில் இயங்கி வந்த ஜி.சி.ஈ, [உயர்தர] பரீட்சை நிலையம் இன்று முதல் இந்து மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் மகளிர் கல்லூரி பரீட்சை நிலையத்துக்குச் சமீபமாக விழுந்தன என்பது தெரிந்ததே.

அதை அடுத்தே பரீட்சை நிலையம் இடம்மாறுகிறது. [ஒ-3]

# ஹெலித் தாக்கு

தென்மராட்சி, ஏப். 29

சனிக்கிழமை காலை புதுக்காட்டுச் சந்திக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றை நோக்கி ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணிக்கு எழுதுமட்டுவாள் சந்திக்கு அப்பால் சென்றுகொண்டிருந்த லொறி மீதும் கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டது. [இ-117]


# பாவிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை

## ஏலத்தில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருள்கள் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 06 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | சாப்பாட்டு மேசை 9 அடி | — 06 | |
| 02. | சாப்பாட்டு மேசைக் கால் | — 13 | |
| 03. | மின்கல விளக்கு | — 11 | |
| 04. | சிற்றுண்டிச்சாலை மேசை மேற்பாகம் | — 01 | |
| 05. | உடைந்த இரும்புக் கதிரை | — 05 | |
| 06. | நெருப்பு அணைக்கும் கருவி | — 03 | |
| 07. | கூரைத் தகரம் 10 அடி | — 09 | |
| 08. | கை கழுவும் தொட்டி | — 01 | |
| 09. | பி. வி. சி. குழாய்கள் | — 08 | துண்டு |
| 10. | மேசைப்பந்து மேசையின் மேல் பகுதி | — 01 | |
| 11. | குளிர் சாதனப் பெட்டி | — 01 | |
| 12. | லிகிதர் மேசை | — 01 | |
| 13. | மரத்தினால் ஆன திரை மறைப்பு | — 01 | |
| 14. | கண்ணாடிக்கதவு | — 01 | |
| 15. | குழாய் மின்குமிழ் காவிகள் | — 16 | |
| 16. | பரீட்சை மேசை மேல் பாகம் | — 02 | |
| 17. | தட்டெழுத்து இயந்திரம் | — 01 | |
| 18. | அலுமினியக் கம்பி வளையம் | — 01 | |
| 19. | இரும்புப் பைப் காலுடன் | — 01 | |
| 20. | பிளாஸ்ரிக் பாத்திரங்கள் | — 01 | |
| 21. | இரும்புக் குழாய் | — 02 | |
| 22 | தகரத் தட்டு | — 01 | |
| 23. | மரக் கதிரை | — 01 | |
| 24. | கை பிடிக் கதிரை | — 02 | |
| 25 | அலுமாரிக்குரிய பலகை | — 01 | தொகுதி |
| 26. | இரும்புக்கதிரைசிற்றுண்டிச்சாலை | — 14 | |
| 27. | சீமெந்து கலக்கும் கரண்டி | — 02 | |
| 28. | மின்னாளான கழிவு நீர்க்குழாய் | — 22 | |
| 29. | இரும்புக் கட்டில் கால் | — 08 | |
| 30. | யன்னல் நிலை | — 01 | |
| 31. | உருக்கு அலுமாரி | — 03 | |

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழகக் காசாளரிடம் செலுத்தி அப்பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4-00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.

[சி-4955]


# ஊரடங்கை நீக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 29

பருத்தித்துறையில் தரித்துள்ள கப்பலில் இருந்து பொருள்களை இறக்க வசதியாக அங்கு ஊரடங்கு உத்தரவை வாபஸ் பெறுமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் யாழ் செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது

தற்சமயம் பருத்தித்துறையில் நங்கூரமிட்டுள்ள ''லங்கா சிறீ'' கப்பலில் இருந்தும்—

ஓரிரு தினங்களில் வரவிருக்கும ''ருமணி'' கப்பலில் இருந்தும்—

பொருள்களை இறக்க வசதியாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது [ஒ-3]

# இன்று

யாழ்ப்பாணம், ஏப். 29

மேதின ஏற்பாடு சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு யாழ்மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவு தொழிற்சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேதின சங்க ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு நல்லூர் ப.நோ. கூ. சங்க மண்டபத்திற்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள். [ஒ]

★

யாழ்ப்பாணம், ஏப். 29

வேலணை ஊர்காவற்றுறை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்களையும், பணியாளர்களையும், இடம்பெயர்ந்துள்ள அங்கத்தவர், பணியாளர்கள் விடயம் தொடர்பாக கலந்தாலோசிக்க இன்று காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ... யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். [ஒ]


# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
08 — 09 — 1931

மறைவு:
10 — 05 — 1990

திதி: 29 — 04 — 1991

அமரர்

## திருஞானசம்பந்தர் அரியநாயகம்

[நிர்வாக உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை]

அன்பின் வடிவே,
அரிய எங்கள் நாயகமே,
துன்ப நிழல்வாலே
சேர்ந்து நிலை குலைந்தோம்,
நெஞ்சம் கலங்கி
நெகிழ்கின்றோம் இப்போதும்
உங்கள் நினைவோ
உயிர் கலந்து நிற்கும், ஐயா!

நீர்வேலி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
உறவினர்கள்

[16628]

# மரண அறிவித்தல்கள்

## திரு. அமிர்தம்

ஊர்காவற்றுறை காம் வீதியைச் சேர்ந்த அமிர்தம் [வர்த்தகர்] 1991 4-27 இல் காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி அந்தோனியாப்பிள்ளை அவர்களின் அன்புக்கணவரும், ஜெபபாலன் [கப்டன் - Sadaka Line], விஜயபாலன் [பொறியியலாளர்], அமுதா, அமலிறோஸ் [கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி], ராஜபாலன் [U.K.], பமலின் [மாணவி, புனித அந்தேனியார் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மரியதாஸ் [புகையிரத நிலைய அதிபர்-பேசாலை], நிர்மலா, ஜெகமலர் [ஆசிரியை, வ/நொச்சிமோட்டை, க. உ. வித்தியாலயம்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 1991-4-28 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு ஞானமங்கால் மல்லாகம் றோ.க. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
அ. விஜயபாலன்
[மகன்]

முடவேம்படி,
சுன்னாகம்.

[16626]

## திருமதி சந்தானலட்சுமி இராமலிங்கம்

திருநெல்வேலியில் வசிக்கும் சந்தானலட்சுமி-இராமலிங்கம் 28 - 04 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் பேரம்பலம் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சுகந்தி, சுமதி சுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிதாஸின் அன்பு மாமியாரும், இளைப்பாறிய ஆசிரியர் சிவராஜாவின் அன்பு மகளும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று திங்கள் காலை 10-00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்!

தகவல்!
து. சிவராஜா.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

[16629]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு அதிகரிக்கப்படும்

அச்சுவேலி, ஏப்ரல் 29

யாழ் மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதே இதன் நோக்கம்.

தற்பொழுது இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இயங்கி வருகிறது. இனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு உருவாக்கப்படும்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை அதிகரிப்பது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்த நிலையில் இருப்பதால் மிக விரைவில் புதிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் செயற்படவுள்ளன.

[இ 11]

## தமிழ் மக்கள் வேதனைக்கு முடிவு காண வேண்டும்

### நாடாளுமன்றில் வாசு

கொழும்பு, ஏப்ரல் 29

''வடக்கு - கிழக்கு மக்கள் இன்று இருளில் தடுமாறுகிறார்கள். அவர்களின் வேதனைகளுக்கு முடிவு காண வேண்டும்''

இவ்வாறு நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை மக்களே. இனப்பிரச்சினையைத் தீர்க்க பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது. அழிவு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவது குறித்து அரசு ஏன் சிந்திக்கக் கூடாது?

இப்படி அவர் கேட்டார்.

அரச தரப்பு எம். பிக்கள் குறுக்கீடுகளுக்கும் மத்தியில் அவர் பேசினார்.

தமிழ் மக்கள் ஈழம் கோருகிறார்கள் என்றால், அப்படிக் கோரவும் அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் அவர் ஒரு கட்டத்தில் கூறினார்.

[இ-த]

## அஞ்சலி

உரும்பராய் ஏப்ரல் 29

குப்பிளான் பகுதியில் வீரமரணமடைந்த லெப்ரினன்ட் தியாகுவின் [ஆவரப் பிள்ளை தம்பிராசா, குச்சவெளி, திருகோணமலை] புகழுடம்பு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்பு புகழுடம்பு புத்தூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. [இ-154]

## அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

ஊர்காவற்றுறையில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான, அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் இணையத்தின் கூட்டம் ஒன்று, இன்று திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு இணையக் காரியாலயத்தில் நடைபெறும். [இ-த]

## செஞ்சிலுவைச்சங்க தொண்டரையும் பாம்பு கடித்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ் போதனா வைத்திய சாலையில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தொண்டர் ஒருவரை பாம்பு தீண்டியது.

பிரதான பாதையில்கடமையிலிருந்த செஞ்சிலுவைச் சங்க தொண்டருக்கே இந்த நிலைமை ஏற்பட்டது. இவர் உடனேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

[இ-15]

## துப்பாக்கி வெடித்து காயம்

யாழ்ப்பாணம், ஏப். 29

மிருக வேட்டைக்காக துப்பாக்கியைச் சரி செய்து கொண்டிருந்தவர் அது எதிர்பாராமல் வெடித்ததில் படுகாயமடைந்தார். இளவாலை மருதநகரைச் சேர்ந்த [illegible] [வயது 52] என்பவரே [illegible]

[த-15]

## பயிலுனர் ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஏப். 29

பயிலுனர் ஆசிரியர்களுக்கான டயிற்றி பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சகல பயிலுனர் ஆசிரியர்களையும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ]


# பாரதிதாசன்
## கல்வி நிறுவனம்

[முன்னை நாள் BECON]

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 91 DAY CLASSES

முழுப் பாடத்திட்டம்;

வினா - விடை வகுப்புகள்

8-00 — 9-00 பொருளியல்: திரு. வரதராஜன்
9-00 — 10-00 அளவையியல்: திரு. S. S. மனோகரன்
10-00 — 11-00 வர்த்தகம்: திரு லோகசிங்கம்
11-00 — 12-00 கணக்கியல்: திரு. சௌந்தி

ஆரம்பம்: 29-04-1991

திங்கட்கிழமை 8.00 மணி

## A/L 91 சனி, ஞாயிறு வகுப்புகள்

மீட்டல் வினா - விடை

| | |
|---|---|
| பொருளியல்: | 12.00 - 1.00 |
| அளவையியல்: | 1.00 - 2.00 |
| கணக்கியல்: | 2.00 - 3.00 |
| வர்த்தகம்: | 3.00 - 4.00 |

ஆரம்பம்: 28-04-1991

ஞாயிற்றுக்கிழமை.

[சி-5137]



# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

மரவேலை, கட்டட வேலை
பயிற்சி நெறிகள்

அகில உலக கெயார் ஸ்தாபனத்தின் (Care-International) உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

✶ காலம்: 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுனர்க்கு:

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரு. 30/- வழங்கப்படும்.
2. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.
3. தூர இடத்து பயிலுனர்க்கு விடுதி வசதிகள் அளிக்கப்படும்.
4. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழிற் பயிற்சி.

ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி — 10 - 05 - 1991

நேர்முகப் பரீட்சை — 13 - 05 - 1991

9-00 முற்பகல்

- பணிப்பாளர்.

[சி-4906]



# பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம்
## PATRICIAN INSTITUTES

★ அகில உலக கெயார் மரவேலை, கட்டுவேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயார் ஸ்தாபனத்துடன் [Care-International] இணைந்து எம்மால் நடத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித் தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும் 8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

**பயிற்சிக் காலம்:**

2½ மாதம் ஸ்தாபன பயிற்சி,
10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி.

**கொடுப்பனவு:**

ஸ்தாபனப் பயிற்சியின் போது மாதம் 600/- உம், 10 மாத பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும். அத்துடன் இலவச உபகரணப் பொதியும் வழங்கப்படும்.

**சான்றிதழ்:**

பயிற்சி நிலைய பயிற்சிச் சான்றிதழ், தொழில் பரீட்சை அடிப்படையில் தேசிய [அரசாங்க] தொழில் சான்றிதழ், சர்வதேசரீதியிலான கெயார் ஸ்தாபன சான்றிதழ்.

**இதர உதவிகள்:**

பயிற்சி முடித்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகள் தொடங்க கெயார் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**

பதிவாளர்,
பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம்,
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு 11 - 05 - 1991 க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## ★ ஏனைய பயிற்சி நெறிகள்

1. Computer Programming in Basic Language & Disk Operating System.
2. Computer word Processing [Word Star - 4000]
3. City and Guilds of London Institute "Quantity Surveying"
4. Draughtsman ship - கட்டடப் படம் வரைதல்
5. Short - Hand and Typing - சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்
6. Electrical Wiring - மின்சார இணைப்பு
7. Motor Mechanism - மோட்டார் மெக்கானிசம்
8. Motor Winding - மோட்டர் வைண்டிங்
9. General Electrician - எலக்ரீஸியன்

மேற்படி பயிற்சி நெறிகள் எதிர்வரும் 15 05 - 1991 ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்களுக்கு:

Registrar,
Patricion Institute of Higher Studies.

## ★ வாகன தகுதி சான்றிதழ் புதுப்பித்தல்

**Fitness Certificate for Motor Vehicle - 1991**

1991 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன தகுதிச் சான்றிதழ் திரு. A.S குணசீலன் [Automobil Engineer] அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்படுகிறது] என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

Registrar,
**Patrician Industrial Institute,**
59, St. Patrick's Road, Jaffna.

[சி-5149]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுத்தமான வேப்பெண்ணெய் மருந்துத் தேவைக்கு உகந்தது. பூச்சியை ஒழிக்க உதவுவது. அரைப் போத்தல் ரூ 45/— மட்டுமே [போத்தலுடன்] மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு மில்க்வைற், யாழ்ப்பாணம். [C/5147]

கடைத் தேவைக்கு பாவிக்கக்கூடிய நல்ல நிலையிலுள்ள இரு பெரிய தேக்கு கண்ணாடி அலுமாரிகள் [Showcase] உடன் விற்பனைக்குண்டு. S. சண்முகநாதன், 562, ஆஸ்பத்திரி வீதியில் தொடர்பு கொள்ளவும். [16622]

ஆரம்ப சுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D. C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ-4828]

## மணமகன் தேவை

இந்து 7 இல் செவ்வாய் ராகு சனி உள்ள பெண்ணுக்கு பொருத்தமுடைய செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் 5' 4'' உயரம் Fair in Complexion இல-305, C/o உதயன் யாழ்ப்பாணம். [16501]

## ஆங்கில வகுப்பு

ஆங்கில மொழியை சரடமாக்கற்க வேண்டுமாயின் உங்கள் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் 1 - 5 - 1991 ஆரம்பமாகவுள்ளன. O/L இற்கான விசேட வகுப்புகள் நடைபெறவுள்ளன. செல்வி M. பாலசிங்கம் 21/2, அம்மன் வீதி, சந்தர்மடம். [16551]

## நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4029]

## ராகு கேது மாற்றம்

புத்தாண்டுப் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. 15 - 05 - 1991 முதல் குரு செவ்வாய் திபசேர்க்கையால் 15-08-1991 வியாழன் மாற்றம் வரை யுத்தம் தொடரும். நாடுகளுக்கும், ஜோதிட ஆலோசனைகளுக்கும், ஜாதகங்களின் கணிப்புகளுக்கும் Prof. சத்தியதாஸன் ஞானம்ஸ் சித்தன்கேணி [16630]

## ஏக்கருக்கு 300 கிலோ விளைவு

கப்புப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இது வரை சுமார் 300 கிலோவுக்கு மேல் கம்புப் பயிர் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கம்புப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன்மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 300 முதல் 400 கிலோ வரை விளைவைப் பெற முடியும் என்றும், ஏக்கருக்கு சுமார் ஆயிரம் மெற்றிக் தொன் விளைவைப் பெற முடியும் என்பது தவறு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

300 கிலோ விதையில் இருந்து 3,600 கிலோ விதையைப் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

---

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்.
2. நோயியல் பேராசிரியர்.
3. மருத்துவப் பேராசிரியர்.
4. உளநோயியல் பேராசிரியர்.
5. குழந்தை மருத்துவப் பேராசிரியர்.
6. அங்கக்கோணல் இறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு.
7. சமூகவியலில் அறக்கொடைத் தவிசு.
8. உடற்றொழியியல் / சமூகமருத்துவம் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும், மாதர் நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியல் விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11.
9. உடற்றொழியியல் / சமூக மருத்துவம் / நோயியல் / சட்ட மருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும், மாதர் நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியலில் தற்காலிக விரிவுரையாளர்:
10. கிளினிக்கல் மனோதத்துவ நிபுணர்.

**சம்பள அளவுத்திட்டம்:**

பேராசிரியர் தரம் 11

ரூபா 12,200 - 6x300- 14,000/- மாதமொன்றுக்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11

ரூபா 8 000 - 5 x 250- 9,250/- மாதமொன்றுக்கு.

விரிவுரையாளர் [மருத்துவம்]

ரூபா 4,500 - 10 x 200- 6,500/- மாதமொன்றுக்கு.

[மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.]

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்

தரம் 11 [மருத்துவம்]

ரூபா 8000/- [நிலையானது]

தற்காலிக விரிவுரையாளர் தரம் 11 [மருத்துவம்]

ரூபா 4500/- [நிலையானது]

தற்காலிக உதவி விரிவுரையாளர் தரம் 11

ரூபா 3900/- [நிலையானது] ஓராண்டிற்கு.

கிளினிக்கல் மனோதத்துவ நிபுணர்

ரூபா 3900/- [நிலையானது] ஓராண்டிற்கு.

[ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4500 - 10, 200- 6500/- சம்பள அளவுத்திட்டத்தில் 4500/- சம்பளப்படியில் வைப்பார்]

பேராசிரியர்களுக்கும், அறக்கொடைத் தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவு திகதி 1991 07 - 12 ஆகும். ஏனையோருக்கு முடிவுத் திகதி 1991-06-03 ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களிற் செய்யப்படல் வேண்டும். பேராசிரியர் பதவிக்கும், அறக்கொடைத் தவிசுப் பதவிக்கும் விண்ணப்பப்படிவத்திற்கான வேண்டுகோளுடன் 23 x 10 செ மீற்றர் அளவுள்ள, சுயமுகவரியிட்டு இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பெற்ற கடித உறையும், ஏனைய பதவிகளுக்கு 13 x 10 செ. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற கடித உறையும் இணைக்கப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப் படுவர்.

குறிப்பு:-

பேராசிரியர் அறக்கொடைத் தவிசு ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 - 04 - 12 [இ-5136]

---

## ஆஸ்பத்திரியில் தண்ணீர் பிரச்சினை

தென்மராட்சி, ஏப்ரல் 29

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உள்ள வார்ட்டுக்களில் போதிய தண்ணீர் இல்லாததால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பிட்ட அளவு தண்ணீரே வைக்கப்படுவதால் மேலதிக தேவைகளுக்கு தண்ணீரை நோயாளரே கிணற்றில் அள்ள வேண்டிய நிலை இருந்து வருகிறது. [இ-171]

## பனை வெல்லம் உற்பத்தி

நவாலி, ஏப்ரல் 29

மல்லாகம் தெல்லு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தினர் பனை வெல்லம் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அண்மையில் திறந்து வைத்துள்ளனர்.

திரு. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அளவெட்டி பிரதேச பொறுப்பாளர் திரு திலகர் கலந்து கொண்டு தொழிற்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். [இ-100]

---

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 25 - 5 - 1991 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள், அவற்றினை 15 - 5 - 1991க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படியும்,

மதிய உணவில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 15 - 5 - 1991க்கு முன்னர் ரூ. 30/- ஐ உபபொருளாளர் திரு ந. உலகநாதனிடம் கொடுத்து உதவும் படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அழைப்பிதழுடன் அனுப்பிவைக்கப்படும்

யா. இ. க.
24 - 4 - 1991.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்.
[இ-5134]

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 196[illegible] - 10 - 02

மறைவு: 1990 - 04 - 29

## அமரர் ப. இரகுபதி

(B. A., S. L. A. S.)

கற்பூரத் தீபமே, கல்விப் பெருங்கடலே,
உன் குறுகிய கால வாழ்க்கையில்
உலகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்து
இன்று எம்மைப் பிரிந்துள்ளாய் ஆயினும்
அனைத்து உள்ளங்களிலும் தெய்வமாகக்
குடிகொண்டுள்ளாய்.

உன் ஆன்மா சாந்தி பெறுவதாக!

உன் பிரிவால் துயருறும்,

பெற்றோர், சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

14 ஆம் வட்டாரம்,
கிழக்கு நெடுந்தீவு. [16620]

---

# நினைவு அஞ்சலி



தோற்றம்: 1932 — 03 — 10

மறைவு: 1991 — 03 — 28

அமரர்

## சங்கரப்பிள்ளை திருச்சிற்றம்பலம்

[ஓய்வுபெற்ற பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்]

அந்தியேட்டி: 1991 - 04 - 29

இல்லத் தொளிவிளக்காய் இருந்து வழிகாட்டி
நல்லார் எனவுலகம் நாளும் புகழ்ந்திடவே
ஒல்லும் வகையெல்லாம் ஓவா தறம் புரிந்தாய்
சொல்லா தெமைப் பிரிந்தாய் சுற்றம்
கலங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி ப திருச்சிற்றம்பலம்,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

57, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். [16627]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழரின் சுயநிர்ணய உரிமை

தமிழ் மக்கள் ஈழம் கோருகிறார்கள். அவ்வாறு தனி நாடு கோருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. தனி ஈழம் உருவாவதைத் தடுக்க வேண்டுமானால் சமஷ்டி ஆட்சிமுறை அமைப்பை ஏற்படுத்துவது குறித்து அரசு சிந்திக்க வேண்டும்;

இவ்வாறாக நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா நாடாளுமன்றத்தில் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு அவர்கள் விரும்பினால் பிரிந்து போகலாம். ஆனால் அவ்வாறு பிரிந்து செல்லாமல் தடுக்க வேண்டுமானால் அவர்களின் உரிமைகளை வழங்கி, இந்நாட்டில் சிங்களவருடன் சமத்துவமாக வாழ்வதற்கு வகை செய்யவேண்டும்- என்ற நிலைப்பாட்டையே திரு. வாசுதேவ நாணயக்காரா நீண்ட நாட்களாகக் கொண்டிருக்கிறார்;

துரதிர்ஷ்டவசமாக திரு: நாணயக்காராவுக்கும் அவரது கட்சிக்கும் தென்னிலங்கையில் போதிய ஆதரவு இல்லை. அதனால் சொல்வதைச் செய்வதற்கோ அல்லது செய்விப்பதற்கு அரசாங்கத்தை உந்துவதற்கோ அவருக்குப் போதிய பலம் இல்லை.

தமிழர்களுக்குத் துரோகங்களும், இன்னல்களும் இழைக்கப்படுவது கண்டு, அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது குறித்து நியாயக் குரல் கொடுத்த இடதுசாரித் தலைவர்களும், கட்சிகளும் முன்னரும் இருந்தது உண்டு. ஆனால் சொந்தத்தில் ஓர் அரசாங்கத்தை அமைக்கக் கூடியவாறு ஆதரவைப் பெறும் அளவுக்கு அவர்களின் சமதர்ம வாதத்தை வளரவிடாமல் தென்னிலங்கையின் பௌத்த-சிங்களப் பேரினவாதம் அமுக்கிவிட்டது. அதனால் கடைசிக் காலங்களில், தமிழர்களுக்குச் சார்பான தங்கள் கொள்கைகளை விற்றுப் பிழைக்கப்பல இடதுசாரி தலைவர்கள் முற்பட்டனர். அவர்களின் கதி வாசுதேவாவுக்கும் வரலாம்

தமிழர்களும் மனிதர்கள். சிங்களவர்களுக்கு உள்ள சகல உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு; அவற்றைப் பறித்தெடுக்க சிங்களவருக்கோ வேறு எவருக்கோ உரிமை இல்லை இதனைச் சிங்களவர்கள் உணருவார்களா என்பது சந்தேகம்;

தமிழ் மக்கள் தமது இறைமையைப்பேணுவதற்கு, தம்மைத் தாமே ஆள்வதற்கு உரிமை உள்ளவர்கள். இதனை உணர்ந்தால் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சி அமைப்பிற்குள் தான் அமையவேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் எண்ண மாட்டார்கள்.

பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர்டன் பேசிய ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன், மாகாண சபைக்குக் கூடுதல் அதிகாரம் தந்து, மேனிமினுக்குச் செய்து ஒரு தீர்வை வழங்கவே தயாராக இருந்தார் என்று அறிகிறோம். சிங்களத் தலைவர்கள் ஒற்றை ஆட்சி அமைப்பைக் கைவிடுவதற்கு இன்னும் தயாரில்லை என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது.

தங்களது இந்தச் சித்தாந்தத் தவறை உணரும்வரை தமிழர் பிரச்சினையை சிங்களவர்களால் தீர்க்க முடியாது. தமிழர்கள் தாங்களாகவே தீர்வை உருவாக்கிக் கொள்ளும் நிலை வரும். பின்னர் சிங்களவர் வருந்தவேண்டியும் ஏற்படும். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் அதுவே நடக்கும்;

# தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம்

## செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரம் பேருக்கு உடனடி நிவாரணம் வழங்கப் படவிருக்கிறது.

யாழ். செயலகத்தில் நேற்று கூட்டப்பட்ட அவசர கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பதில் அரசஅதிபர் திரு.கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் செயலக புனர்வாழ்வுப் பிரிவு பணிப்பாளர் திரு.எஸ். பத்மநாதன், யாழ். உதவி அரச அதிபர் திரு. எஸ், நித்தியராஜ், நல்லூர் உதவி அரச அதிபர் திரு. மகாலிங்கம், வேலணை உதவி அரச அதிபர் திரு. என் தவபாலசிங்கம் உட்பட தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

அங்கு மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு!

★ இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு என அமைக்கப் பட்டுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஞாயிறு, திங்கள் இருதினங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பால் சமைத்த உணவு வழங்கப்படும். செவ்வாய், புதன் இருநாட்களும் செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்படும் அதைத் தொடர்ந்து உலர்உணவு ஒரு வாரத்துக்கு வழங்கப்படும்.

★ தற்போது அமைக்கப் பட்டுள்ள தற்காலிக முகாம்களில் ஏழுநாட்கள் இவர்கள் தங்க வைக்கப்படுவார்கள். அதன்பின்னர் நிரந்தர அகதி முகாம்கள் அமைக்கப்பட்டு, இவர்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்படும்; தற்காலிக முகாம்களில் சுகாதாரம், நீர் வசதிகளை கருத்தில் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ முகாம்களில் தங்காமல் உறவினர் வீடுகளில் தங்கி இருப்பவர்கள் தமது விபரங்களைத் தங்கியுள்ள கிராம சேவையாளர்களிடம் பதிய வேண்டும். அவர்களுக்கு ஒரு வார உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது

★ இந்த நிவாரணங்கள் யாழ் ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்பட்டுள்ள வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கங்களின் தற்காலிக கிளைகள் மூலம் வழங்கப்படவிருக்கின்றன.

[இ-3]

## கிழக்கில் பலர் பரீட்சை எடுக்கவில்லை

கிழக்கு மாகாணத்தில் நடக்கும் விசேஷ ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையை எடுக்க அச்சம் காரணமாக மாணவர்கள் பலர் செல்லவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. [இ-எ]

## சாரண தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணத்தலைவர்கள், திரிசாரணர்களுக்கான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று திங்கட் கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் மே தினத்தன்று சாரணர் சேவை சம்பந்தமாக ஆராயப்படும். [இ]

# குடாநாடெங்கும் மேதின ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

இம்முறை மேதினக் கொண்டாட்டங்கள் பரந்தளவில் நடைபெறவுள்ளன.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் தமிழ் மக்களை ஒன்றிணைத்து இதனை ஒரு மாபெரும் விழாவாகக் கொண்டாட உள்ளனர். இம்முறை ஊர்வலங்களில் பங்கு பற்றும் ஊர்திகள் சுவரொட்டிகள் போன்றவை ஈழப் போராட்டத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும்.

### சுன்னாகம்

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் சுன்னாகம் ஐயனார் கோவிலிலிருந்து ஆரம்பமாகி அலங்கார வண்டிகள் சகிதம் நல்லூரைச் சென்றடையும்.

### வலிகாமம் கோட்டப்பகுதி

வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், அளவெட்டி ஆகிய ப. நோ. கூ. சங்கங்களும், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெ. ப. பொ. உ. வி சங்கங்களும் இணைந்து மேதினக் கொண்டாட்டங்களை நடத்துகின்றன; இதில் ஊர்தி அலங்காரம், சிறுவடையுடனான ஊர்வலம், சுவரொட்டிகள் போன்றவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன,

### உரும்பராய்

உரும்பராய், வெரெழு பகுதியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலமும் நல்லூரை சென்றடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள பிரதான வீதிகள் இதற்காக அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

### யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், வங்கி ஊழியர்கள் மாநகரசபை ஊழியர்கள் உட்பட பல தொழிற்துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களும் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஊர்வலங்களில் பங்கு பற்றவுள்ளனர்.

[த-161 154-15 90]

# ஓய்வு பெற்ற அரச ஊழியர் கொடுப்பனவு இன்றி அவதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

அரசாங்கத்தினால் சென்ற வருடம் அறிவிக்கப்பட்ட சலுகை அடிப்படையிலான இளைப்பாறல் திட்டத்தின் கீழ், கடந்த டிசம்பர் மாதத்தில் ஓய்வு பெற்ற பல அரச ஊழியர்கள், 4 மாதங்களாகியும் எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி சிரமப்படுகின்றனர்.

இளைப்பாற விரும்புபவர்களை ஊக்குவிக்கும் முகமாக போனஸ், திரட்டிய ஓய்வூதியம் போன்றவை வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

ஆனால் தென்னிலங்கையிலுள்ள இளைப்பாறிய அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமிழ்ப் பகுதியிலுள்ள பல ஊழியர்களுக்கு இன்னும் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இளவயதில் இளைப்பாறியவர்களே.

இது பற்றி அவர்கள் தமது அதிகாரிகளிடம் கேட்டபோது கொடுப்பனவு சம்பந்தமான எந்தப் பதிலும் மாகாணசபையில் இருந்து தமக்குக் கிடைக்கவில்லை என்றுதெரிவிக்கப்பட்டதாம்:

பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளருக்கு முறையீடும் செய்துள்ளனர்.

[இ-த]

# லெனினின் பெயருக்கும் சோவியத்தில் ஆபத்து

மாஸ்கோ. ஏப். 29

சோவியத் யூனியனில் உள்ள இரண்டாவது பெரிய நகரான லெனின்கிராட் என்றபெயரை மீண்டும் செண். பீற்றர்ஸ் பேர்க் என்று மாற்றும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

லெனின்கிராட் நகர கவுன்ஸில் இதுகுறித்து சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது எனத் தீர்மானித்துள்ளது

1725 இல் ரஷ்யாவை ஆண்ட மன்னர் பீற்றரின் நினைவாக இந்த நகருக்கு செண் பீற்றர்ஸ் பேர்க் என்று பெயரிடப்பட்டது

ரஷ்யாவில் பின்னர் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் புரட்சியைத் தொடர்ந்து லெனினின் நினைவாக நகரின் பெயர் லெனின்கிராட் என்று 1924 இல் மாற்றப்பட்டது. [இ-எ]

# உணவுச்சாலைகள் மீது கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள்

## ஐவர் குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கண்மாரி போன்ற நோய்கள் பரவுவதற்கு காரணமாக இருந்து வரும் சுகாதார சீர்கேடுள்ள உணவுச்சாலைகள் மீது கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன:

உணவுச்சாலைகளின் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்று சமீபத்தில் யாழ். உணவுச்சாலை உரிமையாளர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கில் ஏற்படுத்தப்பட்டது.

யாழ். மாநகரசபைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தலைமையில் யாழ். ஞானம்ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட உணவுப் பரிசோதகர், மாநகரசபை சுகாதாரக் கல்வி அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர்கள், விடுதலைப் புலிகள் முன்னணியைசேர்ந்த பொறுப்பாளர் திரு. அருள், யாழ். உணவுச்சாலை உரிமையாளர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தமது உரையில், சுகாதார விதிகளுக்கு மாறான முறையில் செயற்படும் உணவுச்சாலைகள் மூலம் நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கண்மாரி ஆகிய நோய்கள் பரவுகின்றன என்றார்.

யாழ். மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் திரு. மகாதேவன் தமது உரையில், சில உணவுச்சாலைகளின் தரமற்ற உணவுப் பண்டங்களும் சுகாதாரமற்ற முறையில் செயற்படும் ஊழியர்களும் மக்களின் சுகவாழ்வைப் பாதிக்கச் செய்கின்றனர். இதற்கு உரிமையாளர்களும் பொறுப்பாவார்.

இன்றைய கால கட்டத்தில் [illegible] மக்கள் நலனில் அக்கறை கொள்ளவேண்டும்; சுத்தமான முறையில் உணவைப் பரிமாற வேண்டும் எனக் கேட்க நுகர்வோருக்கும் உரிமையுண்டு என்பதையும் உரிமையாளர்கள் உணர வேண்டும்.

உணவுப் பண்டங்களைத் தயாரித்தல், பாதுகாத்தல், சுத்தமான முறையில் விநியோகம் செய்தல் ஆகியவை பற்றியும் உரிமையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

யாழ். மாநகரசபை சுகாதாரக்கல்வி அதிகாரி திரு எம். ஜெகநாதன் தமது உரையில், அண்மையில் பரவிய நெருப்புக் காய்ச்சலுக்கும், அசுத்தமான உணவுச்சாலைகளுக்கும் தொடர்புண்டு. தரமான உணவுப் பொருள்களைக் கொண்டு உணவு தயாரிக்க வேண்டும் என்றார்.

இறுதியில் பேசிய தமிழர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உள்ளூர் பொறுப்பாளர் திரு அருள் உணவுச்சாலை உரிமையாளர்கள் தமது கடமைகளை உணர்ந்து நடக்க வேண்டும் என்றார்.

[இ-18]

## பாசிப் பயற்றில் நோய்த்தாக்கம்

மானாவாரிச் செய்கையில் பெருந்தொகையான பரப்பளவில் யாழ். மாவட்டத்தில் பயிரிடப்பட்ட பாசிப்பயறு ஒருவகை நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந் நோயால் பாதிக்கப்பட்ட வயல்களில் விளைவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதேசமயம் எள்ளு இம்முறை மிகவும் நல்ல விளைச்சல் கண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-12]

## மலசலகூடம் இல்லை

தென்மராட்சி, ஏப்ரல் 29

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சரியான மலசலகூட வசதிகள் இல்லாததால் வெளி நோயாளர்களும், பார்வையாளர்களும் பெரும் அவதியுறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-த-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் 4 பாடசாலைகளில் தீவுப்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 29

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த அகதிகள், யாழ்ப்பாணத்தில் நான்கு பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொட்டடி நமசிவாய வித்தியாசாலை, குருநகர் சென் ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, பிரதான வீதியிலுள்ள சென் சாள்ஸ் மகா வித்தியாலயம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே அகதிகள் தங்கியுள்ளனர்.

இந்த முகாம்களிலுள்ள அகதிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, பல ஆயிரக்கணக்கான தீவுப்பகுதி மக்கள் தத்தமது உறவினர்கள், நண்பர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர். [ஓ-15]

# தீவக மக்கள் நலன் கருதி செயலகத்தில் கருமபீடம்

தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளின் நன்மைகருதி யாழ். செயலகத்தில் விசேட கருமபீடம் ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது.

தீவுப் பகுதி மக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்யவும்—

உடனடி நிவாரணத்தை வழங்கவும் வசதியாகவே இந்தக் கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர்களும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களும் கடமையாற்றுவார்கள்.

இதேசமயம் தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த கிராமசேவையாளர்களை இன்று காலை 9 மணிக்கு இந்தக் கருமபீடத்துக்குச் சமுகமளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. [ஓ-3]

# சங்கீத சபை பரீட்சை புதன் நடைபெறமாட்டாது

## கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

"வட - இலங்கை சங்கீத சபையினால் தற்சமயம் நடத்தப்பட்டு வரும் செய்முறைப் பரீட்சைகளில் முதலாம் திகதிய [புதன் கிழமை] பரீட்சைகள் அன்றையதினம் நடைபெறமாட்டா."

— இத்தகவலை யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பரீட்சை பிறிதொரு தினத்தில் நடைபெறும் என்றும்—

அது பற்றிய விவரங்களை அந்தந்தப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் பெறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-3]

# சதாம் விரைவில் ராஜினாமா! ஈராக் பிரதமர் அறிவிப்பு

பக்தாத், ஏப் 29

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தனது பதவியை விரைவில் ராஜினாமாச் செய்து விடுவார் என்று அந்நாட்டின் பிரதமர் அல் ஹமாதி தெரிவித்துள்ளார்.

இதேசமயம் ஜனாதிபதி சதாம் தலைமையிலான, கொள்கை வகுக்கும் இராணுவ புரட்சி மன்றம் கலைக்கப்படும் என்றும்—

நாட்டில் பலகட்சி ஆட்சிமுறை, பத்திரிகை சுதந்திரம் மற்றும் தனியார்மயப்படுத்தல் ஆகிய சீர்திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் புரட்சி மன்றம் கலைக்கப்படும் என்றும் பிரதமர் ஹமாதி மேலும் சொன்னார்.

விரைவில் ஈராக்கின் வரலாற்றில் முதல் தடவையாக நேரடித் தேர்தல் நடத்தப்படும் என்றும் பிரதமர் சொன்னார். [ஓ-எ]

# 7 வீரர்களுடன் 'டிஸ்கவரி' விண்ணுக்கு

வாஷிங்டன், ஏப். 29

ஏழு விண்வெளி வீரர்களுடன் 'டிஸ்கவரி' விண்கலம் நேற்று அமெரிக்காவினால் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நட்சத்திரப் போர்த் திட்டத்தின் கீழ் ஆய்வுகளை மேற்கொள்வதில் 'டிஸ்கவரி'யில் சென்றுள்ள வீரர்கள் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது. [ஓ-எ]


# புதிய கல்வி நிலையம்

219, நாவலர் வீதி, :-: யாழ்ப்பாணம்.

## A/L 91 கணக்கியல்

★ கம்பனி முடிவுக் கணக்கு ★

ஆரம்பம்:- 2-5-91 காலை 7 . 30 மணி

## A/L 91, 92 கணக்கியல்

★ பங்குடமை ★

ஆரப்பம்:- 2-5-91 காலை 8 . 30 மணி

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்:-

திரு. உருத்திரசிங்கம்

[16526]


# மேதினக் கூட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

சகல இணக்க மன்ற உறுப்பினர்களும், உதவியாளர்களும், பொறுப்பாளர்களும் தங்கள் பகுதி பிரதேச அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப்பிரிவு கேட்டுள்ளது.

அன்றைய தினம் இணக்க மன்ற விசாரணைகள் எவையும் நடைபெறமாட்டா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ]

# ப. நோ. கூ. சங்க ஊழியர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வதியும் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க ஊழியர்களை இன்று காலை 8 மணிக்கு யாழ். ப. நோ. கூ. சங்க தலைமையகத்தில் சந்திக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [ஓ]

# நேர்முகப் பரீட்சைக்கு வசதி

யாழ்ப்பாணம், ஏப். 29

இலங்கை அதிபர் சேவை தரம் III நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, இதுவரை நேர்முகப்பரீட்சைக்குச் செல்லாதவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரையுள்ள நாட்களில் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு. க. ஜெயக்குமாருடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்குச் செல்பவர்கள் க. சே. ஆ. கு. உறுப்பினருக்கு சங்க பொதுச் செயலாளரின் கடிதம் ஒன்றை பெற்றுக் செல்லுமாறும்—

நாளை மறுதினம் [புதன்] மாலை நல்லூரில் உள்ள சங்கப் பணிமனையில் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ]

# ஐ. நா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்த லொறியின் சாரதி உயிரிழந்தார்.

"யு என்" [ஐ நா] அடையாளம் பொறிக்கப்பட்டும் ஐ நா கொடி பறக்கவிடப்பட்டும் வந்து கொண்டிருந்த பின் அவ் வாகனத்துக்கு அருகில் ஷெல் விழுந்து வெடித்தது குறிப்பிடத் தக்கது.

ஐ நா தூதரகப் பிரதிநிதிகள் பாதுகாப்பு அமைச்சிடம் உத்தியோக பூர்வமாக ஆட்சேபம் தெரிவிப்பார்கள் என்று எதிர் பார்க்கப் படுகிறது. [உ-3]

# இன்னுயிர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரபுரம்]. முகிலன் [இ. குருநாதன் — மாநிகுளம்], இராமதாஸ் [முறிகண்டி], வேதா [கண்டாவளை], சுஜனி, கிருபா.

நேற்று நடைபெற்ற மோதலில் விசுவாசம் [செல்லத்துரை சுபாஸ்கரன் — வவுனிக்குளம்], ஆனந்தன் [கிருஷ்ணராசா சந்திரன் — திருவை ... வீரமரணமடைந்தனர். [உ]

# மரடோனாவுக்கு பிணை!

போதைப் பொருள் வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரர் டியேகோ மரடோனா நேற்று 20 ஆயிரம் டொலர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

புவனஸ் அயர்ஸில் மத்திய நீதிமன்றத்தில் இரகசியமாக நடத்தப்பட்ட விசாரணையின் பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

கொக்கெயினை பாவித்தது அதனை வைத்து இருந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் மரடோனாமீது அவரோடுசேர்த்துக் கைதான மற்றும் இருவர் மீதும் விரைவில் சுமத்தப்பட உள்ளன.

குற்றவாளியாகக் காணப்படின் மரடோனாவுக்கு ஆகக் கூடியது ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய பரிசோதனையின் போது அவர் கொக்கெயின் பாவித்தது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

உதைபந்தாட்டத் துறையில் நாட்டின் புகழை நிலைநாட்டியதற்காக ஆர்ஜென்ரீனாவின் சிறப்பு தூதராக ஜனாதிபதி கார்லோ மெனம் மரடோனாவை நியமித்திருந்தார். அந்த நியமனத்தை ஜனாதிபதி உடனடியாக ரத்துச் செய்து விட்டார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

# வீட்டுக்கு தந்தை வைத்த தீ! இரு பிள்ளைகள் சிக்கினர்!!

யாழ்ப்பாணம், ஏப், 29

சித்த சுவாதீன மற்றவர் என்று கருதப்படுபவர் வீட்டுக்கு வைத்த தீயில் சிக்கி அவரின் இரண்டு குழந்தைகள் கடுமையான எரிகாயங்களுக்கு இலக்காகின,

அக்குழந்தைகள் ஆபத்தான நிலையில் யாழ்: ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டன.

இச்சம்பவம் நேற்றிரவு சுமார் 9 மணியளவில் யாழ்ப்பாணம் அரியாலை கண்டி வீதியில் இடம்பெற்றிருக்கிறது.

குழந்தைகளின் தாயார் நேற்றிரவு-பூரணை தினத்தன்று— தமது குழந்தைகளுடன் வீட்டில் படுத்திருந்ததாகவும்—

அவ்வேளை திடீரென வீட்டுக்குள் வந்து புகுந்த அவரின் கணவர், அவரைத் தாக்க முற்பட்டதாகவும்—

கணவனின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக மனைவி அயல் வீடு ஒன்றில் தஞ்சம் புகுந்ததாகவும்—

அந்த அயல்வீட்டில் வந்து சத்தம் போட்ட கணவர் திரும்பிச் சென்று தமது வீட்டுக்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது,

வீட்டில் இருந்த கால்நடைகளை அவிழ்த்துவிட்டுவிட்டு, வீட்டைப் பூட்டி அவர் தீ வைத்தார் என்றும்—

இதனால் வீட்டுக்குள் படுத்திருந்த இரண்டு குழந்தைகளும் தீயில் சிக்கியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தீயில் சிக்கிய குழந்தைகளை அயலவர் காப்பாற்றி யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தனர்.

தீயினால் வீடு, பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க உடைமைகளுடன் எரிந்து நாசமாகியது,

சசி [வயது 8], வினோத்குமார் [வயது 2] ஆகிய இரு குழந்தைகளுமே கடும் தீக்காயங்களுக்கு இலக்காகின, [உ-5]

# சமைத்த உணவு தந்துதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 29

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு உணவு வழங்கும் பணிக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சமைத்த உணவு மற்றும் உணவுப் பொருள்களைத் தந்து உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ். நகர மக்கள், வர்த்தகர்கள், பொது ஸ்தாபனத்தினர் ஆகியோரை அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வந்த மக்களைப் பராமரிக்கும் பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் சார்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒருமுகப் படுத்தி வருகிறது.

தீவக மக்களுக்கு உதவுவோர் யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாசாலைக்கு அருகிலுள்ள த. பு கழக அலுவலகத்தில் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. [அ]

# மரண அறிவித்தல்

## நடராசா சிவப்பிரகாசம்

கந்தர்மடம் சின்னையா நடராசா சிவப்பிரகாசம் [முன்னாள் ஏ. ஜே. ஸ்தாபன கணக்காளர்] காலமாகி விட்டார்,

இவர் காலஞ்சென்ற ஜெயசோதியின் அன்புக் கணவரும், பத்மினிதேவியின் அன்பு தகப்பனாரும், சாவகச்சேரி சட்டத்தரணி எஸ். கந்தசாமியின் [ஜே. பி. யு. எம்.] அன்பு மாமனாரும், நளினி, ஜானகி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்], அகிலன், சுகந்தன் [டிறிபேக் கல்லூரி மாணவர்கள்] விமலன், ஜமுனா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற கந்தர்மடம் மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி, சண்முகநாதன், கோண்டாவில் சிவநாதன், சத்தியமூர்த்தி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று திங்கள் மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி இல்லத்திலிருந்து கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்,

உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

எஸ், கந்தசாமி [ஜே பி.யு.எம்]
[சட்டத்தரணி]

சேச் வீதி,
சாவகச்சேரி,

[16528]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org